**DEPOSITION DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF III ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

O.S.No. 3069 of 2014

Deposition of witness for

PW1

Name : Thiru.B. Ravi kumar

Father's Name : A.E.Bala subramani

Age : 63 years

Address : No. 100/28, Avvai Nagar, Thiruvanmiyur, Chennai - 600 041.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day January of 2026 .

---

20.01.2026

PW1 குறுக்கு விசாரணை

சாட்சி சத்திய பிரமாசத்தியமாணம் செய்யப்பட்டார்.

என்னுடைய வீட்டில் பிரதிவாதி வாடகைக்கு இருந்தார் என்று சொன்னால் சரிதான். குன்றத்தூர் காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகாரின் பேரில் விசாரணை மேற்கொண்டார்கள் என்று சொன்னால் சரிதான். மேற்படி விசாரணையில் போலீசார் பிரதிவாதி வாடகை பாக்கி வாதிக்கு கொடுக்க வேண்டும் அறிவுறுத்தினார்கள் என்று சாட்சி கூறுகின்றார். 29.01.2014 பிறகு எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே சுமூகமான உறவு இல்லை என்று சொன்னால் சரிதான். நான் பிரதிவாதிக்கு மொத்தமாக ரூபாய். 11 லட்சத்தை கடனாக கொடுத்திருக்கின்றேன். ஆனால் என்னுடைய தாவாவில் ரூபாய்.20,16,000/- ஐத் திருப்பி தர வேண்டும் என்று கூறியிருக்கின்றேன் என்று சொன்னால் சரிதான்.

பிரதிவாதி நான் புகார் கொடுத்த மறுநாள் காவல் அதிகாரி முன்பு வீட்டை காலி செய்துவிட்டார். வா.சா.ஆ.2 ஆவணத்தில் சாட்சிகளாக கையொப்பமிட்டுள்ள நபர்களின் விலாசம் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த இரண்டு சாட்சிகளில் முதல் சாட்சி என்னுடைய மனைவி என்று சொன்னாலும் சரிதான். பொதுவாக பத்திரங்களை எழுதிக் கொடுக்கும் நபர் அவர் பெயரில் தான் பத்திரங்களை வாங்குவார் என்றும் ஆனால் வா.சா.ஆ.2 என்னுடைய பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரிதான். நான் பாதுகாவலர் என்ற முறையில் மேற்படி பத்திரத்தை வாங்கியதாக சாட்சி சொல்லுகின்றார். வா.சா.ஆ.3 ஆவணம் பிரதிவாதி கடன் வாங்கியதற்கு ஆதரவாக பாதுகாப்பு நிமித்தமாக எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணம் பிரதிவாதி கடன் வாங்கியதற்கு ஆதரவாக பாதுகாப்பு நிமித்தமாக எழுதிக் கொடுக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரிதான்.
வா.சா.ஆ.4 தயாரிக்கப்பட்ட ஆவணம் என்னுடைய பெயரில் தான் வாங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். ஆனால் அதை நான் வாங்கவில்லை மேற்படி ஆவணத்தை பிரதிவாதியை தயார் செய்து கொண்டு வந்து என்னிடம் கையொப்பம் பெற்றதாக சாட்சி கூறுகின்றார். வா.சா.ஆ.4 தயாரிக்கப்பட்டிருக்கும் முத்திரைத்தாளிலும் பச்சை நிறத் தாளிலும் பிரதிவாதியின் உடைய கையொப்பத்தை நிரப்பப்படாத ஆவணத்திலேயே நான் பெற்றுக் கொண்டேன் என்று சொன்னால் அது சரியல்ல. மேற்படி வா.சா.ஆ.4 என்னுடைய வசதிக்கேற்ப பின்னிட்டு மேற்படி ஆவணத்தை நானே தயார் செய்து கொண்டேன் என்று சொன்னால் அது சரியில்லை. வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.4 முன்னிலைக்கு பிரதிவாதி எனக்கு எந்த தொகையும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் அது சரியில்லை. வா.சா.ஆ.5 முதல் 7 வரை உள்ள ஆவணங்களில் கடனுதவி செய்த பொழுது வெற்று தாள்களில் நான் பிரதிவாதியின் கையொப்பத்தை பெற்றேன் என்று சொன்னால் அது சரி இல்லை. வா.சா.ஆ.5 முதல் 7 வரை உள்ள ஆவணங்களில் பாதுகாப்பு நிமித்தமாக வெற்றுத் தாள்களில் பிரதிவாதியிடம் நான் கையொப்பமிட்டேன் என்றும், பணத்தின் தேவை

அதிகமாக இருந்ததால் பிரதிவாதியும் நான் கேட்டுக்கொண்டபடி கையொப்பமிட்டு கொடுத்தார் என்று சொன்னால் அது சரியில்லை. வா.சா.ஆ.5 முதல் 7 வரை உள்ள ஆவணங்களில் சாட்சிகளின் விலாசம் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். மேலே குறிப்பிட்ட மூன்று ஆவணங்களிலும் முதல் சாட்சி என்னுடைய மனைவி என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.5 முதல் 7 வரை உள்ள ஆவணங்கள் அடிப்படையில் பிரதிவாதி எனக்கு எந்த கடன் தொகையும் திருப்பிக் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் அது சரியில்லை. வா.சா.ஆ.11 முதல் 14 வரை உள்ள ஆவணங்களிலும் வெற்றுத் தாளிலேயே பிரதிவாதியிடமிருந்து பாதுகாப்பு நிமித்தமாக நான் கையொப்பம் பெற்றேன் என்று சொன்னால் அது சரியல்ல. வா.சா.ஆ.11 முதல் 14 வரை உள்ள ஆவணங்களில் சாட்சியாக என்னுடைய மனைவியின் கையொப்பம் உள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.11 முதல் 14 வரை உள்ள ஆவணங்கள் அடிப்படையில் பிரதிவாதி எனக்கு எந்த கடன் தொகையும் திருப்பிக் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் அது சரியில்லை. வா.சா.ஆ.15 முதல் 18 வரை உள்ள காசோலைகளில், 10.03.2014 என்று தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.15 முதல் 18 வரை உள்ள காசோலைகளை பாதுகாப்பு நிமித்தமாகவே பிரதிவாதியிடமிருந்து தேதி தொகை குறிப்பிடாமல் வெற்று காசோலைகளில் நான் கையொப்பம் பெற்றுக் கொண்டேன் என்று சொன்னால் அது சரியில்லை. வா.சா.ஆ.15 முதல் 18 வரை உள்ள காசோலைகளின் அடிப்படையில் பிரதிவாதி எனக்கு எந்த கடன் தொகையும் திருப்பிக் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் அது சரியில்லை. வா.சா.ஆ.15 முதல் 18 வரை உள்ள காசோலைகளை பணமாக்கும் பொருட்டு வங்கியில் செலுத்தினேன் என்பதற்கு ஆதரவாக ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கின்றேனா என்றால் செலுத்தி இருப்பதாக சாட்சி கூறுகின்றார். பிரதிவாதி அ.வ.எண்.2248/2014 என்ற வழக்கு 12வது உதவி நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கின்றார் என்று சொன்னால் சரிதான். ஆனால் அந்த வழக்கில் இதுவரை தனக்கு அழைப்பாணை வரவில்லை என்று சாட்சி

கூறுகிறார். மேற்படி தாவா வா.சா.ஆ.15 முதல் 18 வரை உள்ள காசோலைகளை வாதியாகிய நான் பணமாக்கும் பொருட்டு வங்கியில் செலுத்தக்கூடாது என்றும் மேற்படி காசோலைகளை பிரதிவாதியிடமே திருப்பி கொடுத்து விட வேண்டும் என்றும் பரிகாரம் கோரி தாக்கல் செய்திருக்கின்றார் என்று சொன்னால் சரிதான். தாவா பக்கம் நாளில் என்னால் போடப்பட்டுள்ள கணக்குகள் அனைத்தும் என்னுடைய கற்பனையாக என்னாலே போடப்பட்டவை என்று சொன்னால் அது சரியில்லை என்று சாட்சி கூறுகிறார். மேலே கூறியபடி பிரதிவாதி எனக்கு அசலோ பணமோ திரும்பி செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் அது சரியல்ல. பி.சா.ஆ.2–ல் என்னுடைய மனைவி ரூபாய். 11,00,000/-தை 29.12.2013 அன்று பிரதிவாதி அவரிடம் திருப்பி செலுத்தி விட்டதாக கையொப்பமிட்டு கொடுத்திருக்கின்றார் என்று சொன்னால் மேற்படி ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடைய மனைவியின் கையொப்பமே இல்லை என்று சாட்சி கூறுகின்றார். என்னுடைய மனைவியை தவிர வேறு யாரும் அவருடைய கையொப்பத்தை பற்றி மறுத்து சொல்ல முடியாது என்று சொன்னால் அது சரியல்ல. என்னுடைய மனைவியின் கையொப்பம் எனக்கு நன்றாக பரிட்சயம். எனவே அதைப் பற்றி என்னால் சொல்ல முடியும் என்று சாட்சி கூறுகிறார். நான் என்னுடைய மனைவியை இந்த வழக்கில் ஒரு சாட்சியாக விசாரிக்க தயாராக இருக்கின்றேனா என்றால் அவரை இந்த நீதிமன்றத்தில் அழைத்து பி.சா.ஆ.2 சம்பந்தமாக கேள்வி கேட்டால் அவர் சாட்சியமளிக்க தயாராக இருப்பதாக சாட்சி கூறுகின்றார். பி.சா.ஆ.2 ஆனது 2014 ஆம் வருடத்தில் இடைநிலை மனு எண்.1 ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கின்றது என்றும், மேற்படி ஆவணம் போலியாக தயாரிக்கப்பட்ட ஆவணம் என்று இதுவரை நான் பிரதிவாதிக்கு எதிராக நடவடிக்கை எதையாவது எடுத்து இருக்கின்றேனா என்றால் இல்லை. வழக்கு நிலுவைவில் இருந்ததால் நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சாட்சி கூறுகிறார். பி.சா.ஆ.2 அடிப்படையில் பிரதிவாதி எனக்கு கொடுக்க வேண்டிய எல்லா பணத்தையும் திருப்பிக் கொடுத்து விட்டார் என்றும், அவரிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற ஆசையில் நானே பல ஆவணங்களை போலியாக

தயாரித்திருக்கின்றேன் என்று சொன்னால் அது சரியில்லை. என்னால் இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கின்ற ஆவணங்கள் அனைத்தும் பிரதிவாதி பாதுகாப்பு நிமித்தமாக வெற்றுத் தாளில் கையொப்பமிட்டு கொடுக்கப்பட்ட ஆவணங்கள் என்று சொன்னால் அது சரியல்ல. பிரதிவாதி தாவாவில் நான் கோரியிருக்கின்ற எந்த தொகையையும் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் அது சரியில்லை.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

20.01.2026

III Addl. Judge.
III Addl. Court.